# முன்னேற்றப் பாதையில்

## சுயசார்பு தொழில் முயற்சி நிதியம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
83/2, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

தமிழ் இணையக்காப்பகம்
Tamileelam Archive

பொதுசன
-04.1992
பகுதி
யாழ்ப்பாணம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# முன்னேற்றப் பாதையில் . . . . .

''கிடைக்கக்கூடிய பொருளாதார வளங்களைக் கொண்டு அதிகபட்ச பயன்பாடு ஏற்படக்கூடிய வகையில் தொழில் முயற்சிகளுக்கு உதவிகளை வழங்கி, ஊக்குவித்து பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன் மக்களை தங்குநிலையில் இருந்து சுயசார்பு நிலைக்கு கொண்டு வருவதையே நோக்கமாகக் கொண்டு சுயசார்பு தொழில் முயற்சி நிதியம் (1990) *Self Employment Fund — 1990* தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டது.

காலத்தின் தேவை கருதி நம்பிக்கையுடன் நெருக்கடிகளுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின் 18 மாத கால உறுதியான வளர்ச்சி, எமது மக்களுக்கான இதுபோன்ற பணிகளை விரிவாக்க பலருக்கும் வழிகாட்டும் என்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

செயலாளர்

27-05-1992 தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

★

Tamileelam Archive

# முன்னுரை

1990 நடுப்பகுதியில் இருந்து இலங்கைத்தீவின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது. இந்திய இராணுவ நெருக்கடிகளில் இருந்து மக்கள் விடுபட்டு தலை நிமிர முன்னர், மக்கள் எதிர் பாராத நேரத்தில் ஏற்பட்ட யுத்தம் இரண்டு ஆண்டுகளாகத் தொடர்கிறது.

நடைபெற்று வருகின்ற யுத்தத்தின் தாக்கங்கள் இராணுவ அரசியல் அடிப்படையில் மட்டுமல்லாமல் சமூக பொருளாதாரத் தளங்களிலும் பெருகியுள்ளது. தரை, கடல், வான் தாக்குதல் களால் வடக்கு கிழக்கில் மக்கள் முன்னெப்போதும் இல்லாத அளவில் நிராதரவாகியுள்ளனர்.

விசேடமாக கிழக்கு மாகாணத்திலும், குடாநாட்டின் கரையோரக் கிராமங்களிலும் வன்னி, மன்னார் பகுதிகளில் இருந்தும் மக்கள் பெருமளவில் வெளியேறினார்கள். பெருமளவு மக்கள் முகாம்களில் தஞ்சமடைந்தார்கள்.

## மாறுபட்ட வாழ்க்கை

இடம்பெயர்வுகளினாலும் பொருளாதாரத்தடை போன்ற அழுத்தங்களினாலும் தமிழ்மக்களின் வழமையான பொருளாதார வாழ்வு கடுமையாகப் பாதிக்கப்பட்டது. உழைத்து வாழ்ந்த வாழ்க்கை முறையே மாறிப்போய்விட்டது. தொழில் செய்வதற்கான வாய்ப்புகள் பொருளாதாரம் சீர்குலைந்து விட்டமையாலும் போர்க்கால நெருக்கடிகளாலும் அற்றுப் போய்விட்டன. உழைத்து வாழ்ந்த மக்கள் தமது உணவுக்காக நிவாரணங்களை தேடி அலைய வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டனர். இடம் பெயர்ந்து முகாம்களில் வாழ்ந்த மக்கள், கிடைக்கின்ற நிவாரணத்துடன் முகாம்களிலேயே முடங்கி யிருந்தனர்.

## நெருக்கடி நிலையில் எமக்கு ஏற்பட்ட பொறுப்பு

நாளுக்குநாள் வாழ்க்கை நிலைமைகள் மேலும் மோசமாகிச் சென்றன. மக்களை நெருக்கடிகளில் இருந்து விடுவித்து இயல்பு நிலைக்குக் கொண்டுவர எம்மாலான முழுமையான முயற்சிகளையும் எடுக்கவேண்டிய பொறுப்பு அந்த மக்களுடன் வாழ்கின்ற ஓர் சமூகசேவை அமைப்பு என்ற வகையில் எம்மீது சார்கிறது.

இப்படியான நிலையில் எரிபொருள்தடை, மின்தடை, விவசாய உள்ளீடுகள் போன்றவற்றிற்கான தடை, கடற்தொழில் செய்யத்தடை என்று வரிசையாகத் தொடரும் தடைகளுக்கு மத்தியில் சகல தொழில்வாய்ப்புகளுக்குமான கதவுகள் இறுக மூடப்பட்ட ஒரு காலக்கட்டத்தில் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்வதற்காக குறைந்தபட்சம் பட்டினிச் சாவை விரட்டியடிப்பதற்காகவாவது புதியபுதிய தொழில் வாய்ப்புக்களை இனங்காண வேண்டியிருந்ததுடன் அவற்றுக்குத் தேவையான நிதிவளங்களை வழங்க வேண்டியதும் அவசியமாக அமைந்தது.

## நெருக்கடிகள் ஏற்படுத்திய தொழில்வாய்ப்புகள்

எப்பொழுதும் ஒருபாதை அடைக்கப்படும்போது இன்னொரு பாதை திறக்கப்படும். இவ்வகையில் தடைகளாலும் அழுத்தங் களாலும் மிகப் பெருமளவில் தொழில்வாய்ப்புகள் அற்றுப் போன கட்டத்தில் போர்க்காலத்திற்கே உரிய புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகின.

எரிபொருள் தடையினால் வாகன போக்குவரத்துகள் சீர்குலைந்து போயின. போக்குவரத்துச் சாதனமாக சைக்கிள்கள் மாறின. உள்ளூரில் போக்குவரத்துச் சாதனமாக மாறிய சைக்கிள் படிப்படியாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள், விவசாய உள்ளீடுகள் கைத்தொழில்களுக்கு அவசியமான உபபொருட்கள் என்று அவசியமான பொருட்களை ஏற்றிவருகின்ற சாதனமாகப் பயன்பட்டுள்ளது. ஒரு லொறி ஏற்றிவருகின்ற பொருட்களின் அளவை 200 சைக்கிள்கள் ஏற்றிவந்தன, இதன் மூலம் மனிதவலுவினை கூடியளவு ஈடுபடுத்தக்கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டதுடன் எமக்குத் தேவையான அத்தியாவசிய பாவனைப் பொருட்களையும் விவசாய உள்ளீடுகளையும் கைத்தொழில்சார் பொருட்களையும் பெருமளவில் கொண்டு வரக்கூடியதாக இருந்தது.

சிறியசிறிய தொழில் முயற்சிகள் வளர்ச்சியடைந்தன. குறைந்த முதலீட்டுடன் பலரும் தொழில்களை செய்யத் தலைப்பட்டனர். இவ்வாறான சிறிய வியாபார முயற்சிகள் போர்க்காலக் கட்டத்தில் உருவான தவிர்க்க முடியாத தொழில் வாய்ப்புகள் ஆகும்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## மக்கள் மீது நம்பிக்கையுடனான திட்டம்

எங்கள்முன் இருந்த முக்கியவிடயம் மக்களை எதிர்காலத்தில் நம்பிக்கை உடையவர்களாக வைத்திருப்பதேயாகும். அவர்கள் தொழில்செய்ய வேண்டும், உழைக்கவேண்டும், தமது உழைப்பில் வாழவேண்டும்.

இவ்விடயம் சம்பந்தமாக நாம் வங்கிகள் உட்பட பல அமைப்புகளுடன் தொடர்புகொண்டோம். தொழில் வாய்ப்புகள் உறுதியற்ற நிலையில் இவர்களுக்கு வழங்கும் உதவிகளை மீளப்பெறமுடியாதென்ற சந்தேகத்தால், உதவி வளங்குவதில் பெருமளவில் தயக்கம் காட்டினர். வேதனையான அநுபவங்களுடன் எங்களுடைய மக்கள் மீது கொண்ட நம்பிக்கையின் பேரால் எமக்குக் கிடைத்த குறைந்தளவு வளங்களுடன் தொழில்வாய்ப்புக்கான கடனுதவித் திட்டமொன்றை ஆரம்பித்தோம்.

இடம்பெயர்ந்து முகாம்களில் முடங்கிக்கிடந்த மக்களை தொழில்வாய்ப்புகளில் ஈடுபடுத்த வேண்டிய அவசியம் இருந்தது. இதற்கான ஓரளவினதான நிதிவளங்களும் இனங்காணப்பட்டது. ஆனால் எம்மால் ஒவ்வொருவரது திறமைக்கும் இயல்புக்கும் ஏற்ற தொழில் வாய்ப்புக்களை இனங்காண்பதில் சிரமம் இருந்தது. இதனால் தொழில்வாய்ப்புக்களை இனங்காணும் பொறுப்பு பயனாளிகளிடமே விடப்பட்டது.

உதவிகள் மீளப்பெறும் கடன்களாக வழங்கப்பட்டு, மீளப்பெறப்பட்டு, சுழற்சி முறையில் விஸ்தரிக்கப்பட்டது. உதவி பெற்றவர்கள் உதவியை படிப்படியாக மீளச்செலுத்தும் அதே நேரம், தமது பெயரில் ஓர் சேமிப்பையும் எம்மிடம் ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

மீளப்பெறும் உதவித்திட்டங்கள் பெரும்பாலும் வெற்றிபெறாததற்கான காரணம் பொருத்தமானவர்கள் தெரிவுசெய்யப்படாமையும், உரியநேரத்தில் உதவி வழங்கப்படாமையும் என்பதை கவனத்தில் எடுத்துச் செயல்பட்டுள்ளோம். பயனாளிகளின் நன்மைகருதியே இத்திட்டம் என்பதால், பிரதேசங்களின் புறநிலைகளை கருத்தில் எடுத்து போதிய நெகிழ்வுத்தன்மை உடையதாக திட்டம் வகுக்கப்பட்டது

யாழ். மாவட்டத்தில் சிறு வியாபாரங்கள், சிறுகைத்தொழில்கள், கடற்தொழில், விவசாயம், கால்நடை வளர்ப்பு என்று பலதொழில்களிலும் மக்கள் ஈடுபட்டனர்.

அதே சமயம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் விவசாய உற்பத்தியை ஊக்குவிக்குமுகமாக விவசாயிகளுக்கே இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டது.


## புதிய நெருக்கடிகளும் மக்கள் முகங்கொடுக்க தயாராகவுள்ள நிலையும்

பொருளாதாரத்தடை தீவிரமாக இருந்தபோது உருவாகிய தொழில் வாய்ப்புகளானவை அழுத்தங்களினதும் தடைகளினதும் தன்மை மாறியபோது படிப்படியாக அற்றுப்போகத் தொடங்கின. திரும்பவும் ஒருவகையில் தொழில் இழப்புகளும் மாறுபாடான நெருக்கடிகளும் எதிர்கொள்ளப்படுகின்றன. இம்மாற்றங்களை உள்வாங்கி அவற்றிற்கு ஏற்றமுறையில் தொழில்முயற்சிகளை மீள உருவாக்கிக் கொள்ளவேண்டியது காலத்தின் தேவையாகும். எமது திட்டத்தின்கீழ் செயல்படும் பயனாளிகள் தாமாகவே இவ்வகையில் செயல்பட்டு வருவதனை அவதானிக்க முடிகிறது.



கிராமிய பெண்களுக்கான தையல் பயிற்சி நிலையம்
சாவகச்சேரி.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



வருமானத்துக்கான சிறுவியாபார முயற்சி
பண்டிதர் குடியிருப்பு.

## திட்டத்தின் பயன்பாடும் வெற்றியும்

- சுயசார்பு தொழில் முயற்சி நிதியத்தில் உதவி பெற்ற வர்கள் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருவாயைப் பெற்று வருகின்றனர்.

- நிதியத்தில் உதவிபெற்றவர்கள் ஆர்வமாக உரிய தவணை யில் மீளளிப்புத் தொகைகளை செலுத்தி வருகிறார்கள்.

- நிதியத்தில் உதவிபெற்று தொழில் முயற்சிகளில் ஈடுபட்ட வர்கள் தமது வாழ்க்கைக்கான வருவாயைப் பெறுவதும், தவணைப் பணங்களை செலுத்துவதும் என்ற நிலைக்கப் பால் நிதியத்தில் சேமிப்பை ஏற்படுத்திக் கொண்டுள் ளார்கள்.

- வன்னி மாவட்டங்களில் நிதியத்தின் உதவிமூலம் பெருமளவு விவசாய தொழிலாளர்கள் புதிதாக விவசாயத்தில் ஈடுபட முடிந்துள்ளது.

- 1990 நவம்பர் முதல் 1992 ஏப்ரல் வரை 4,358 குடும் பங்கள் நிதியத்தில் உதவி பெற்றுள்ளன.

- ரூபா 60,27,175ஐ முதலீடாகக் கொண்டிருந்த திட்டம் சுழற்சிமுறையில் செயற்பட்டமையால் ரூபா 107,99,945 ஐ மீளளிப்பு உதவியாக வழங்கக் கூடியதாக இருந்துள்ளது.

- வன்னி மாவட்ட விவசாயத் திட்டங்களில் இதுவரை சேமிப்புத் திட்டம் அறிமுகப்படுத்தாதபோதும், யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்தோர் முகாம்களில் நிதியத் தில் உதவிபெற்ற 1,869 குடும்பங்கள் ரூபா. 8,78,139.60ஐ சேமிப்பாக வைத்துள்ளார்கள்.


- பாதிக்கப்பட்ட மக்களின் தொழில் வாய்ப்புகளுக்கான பொருளாதார உதவிகள் வழங்குவதில் ஆரம்ப நாட்களில் இருந்த தொய்வு நிலை நீங்கி படிப்படியாக பல அமைப் புகள் சுழற்சி முறையிலான மீளப்பெறும் உதவித் திட் டங்களை செயல்படுத்த முன்வந்துள்ளார்கள்.

# சுயசார்பு தொழில்முயற்சி நிதியம்

## 15-11-1990 — 30-04-1992 வரையான கணக்கு அறிக்கை

| கிளை | கடன் எண்ணிக்கை | நடைமுறை முதலீட்டு நிலுவை | சுழற்சி முறையில் வழங்கிய தொகை | சேமிப்புமீதி |
|---|---|---|---|---|
| 01 யாழ்ப்பாணம் 1 | 123 | 1,50,000 00 | 3,37,000 00 | 30,925 00 |
| 02 தெல்லிப்பளை 1 | 1,356 | 2,39,900 00 | 23,00,900 00 | 3,74,811 00 |
| 03 மருதங்கேணி | 200 | 1,12,500 00 | 4,02,000 00 | 68,275 00 |
| 04 பருத்தித்துறை | 354 | 3,04,000 00 | 7,98,350 00 | 1,61,000 00 |
| 05 நவாலி | 145 | 55,000 00 | 3,44,000 00 | 19,475 00 |
| 06 நாவற்குழி | 44 | ---------- | 88,000 00 | 34,425 00 |
| 07 சாவகச்சேரி | 191 | 2,00,000 00 | 2,66,000 00 | 20,025 00 |
| 08 மூளாய் | 80 | 1,00,000 00 | 80,260 00 | -------- |
| 09 பண்டிதர் குடியிருப்பு | 350 | 7,60,500 00 | 9,08,000 00 | 55,700 00 |
| 10 யாழ்ப்பணாம் 11 | 83 | 4,50,000 00 | 5,10,000 00 | 81,028 00 |
| 11 தெல்லிப்பளை 11 | 53 | 2,25,000 00 | 2,65,000 00 | 13,348 60 |
| 12 கிளிநொச்சி | 357 | 11,64,885 00 | 14,84,750 00 | 11,050 00 |
| 13 முல்லைத்தீவு | 1,392 | 16,00,000 00 | 23,00,295 00 | 8,077 00 |
| 14 வவுனியா | 191 | 6,65,390 00 | 7,15,390 00 | ---------- |
| | 4,919 | 60,27,175 00 | 1,07,99,945 00 | 8,78,139 60 |

## இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வருமானத்துக்கான தொழில் முயற்சிகள்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## திட்ட செயற்பாட்டில் முகங்கொடுக்கவேண்டியிருந்த தாக்கங்கள்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இத்திட்டத்தை செயற்படுத்திய போது சில கட்டங்களில் சிறிய பாதிப்புக்களுக்கும் முகங் கொடுக்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

ஆரம்ப நாட்களில் உதவி கோரிவந்த அனைவருக்கும் உதவி வழங்கியபோதும் அவர்களுடன் நெருங்கிய தொடர்புகள் இல்லாமையால் சில தோல்விகளை ஏற்கவேண்டி ஏற்பட்டது. இவ்விடயம் எம்மால் ஆராயப்பட்டு கூடுமானவரை நெருக்க மான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டமையும், தவணைப் பணம் செலுத்தும் காலத்தை நெருக்கமாக வைத்துக் கொண் டமையும் வெற்றியைநோக்கி இட்டுச் செல்ல வழி வகுத்தது.

இதேபோல், வன்னிப் பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது விவசாயிகளை இனங்காண்பதில் ஏற்பட்ட தவறுகளும், பயிர்ச்செய்கைக் காலத்தை சரியாக பயன்படுத் தாமையும், விவசாய உள்ளீடுகளை உரிய நேரத்தில் பெறமுடி யாமையும், எமக்கு சில பாதிப்புகளை ஏற்படுத்தியது. நாளடைவில் இவற்றை ஆராய்ந்து தேவையான மாற்று நடவடிக்கைகளை எடுத்து இப் பாதிப்புக்களில் இருந்து விடுபட்டுள்ளோம்.

## முடிவுரை

நீண்ட இரண்டு ஆண்டுகளை எட்டிப்பிடித்துள்ள போர்க்கால நெருக்கடிகளினால் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்க்கை முறைகள் பாதிக்கப்பட்டுள்ளன, இன்றும் பாதிப்புகள் தொடர்கின்றன, பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் புனர்வாழ்வை வேண்டி நிற்கின்றன.

இப்படியானதோர் நிலையில், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இத்திட்டத்தின் மூலம் பெரிதாக எதையும் சாதித்து விட்டதாகக் கூறவில்லை. போர்க்கால நெருக்கடிகளுக்கு மத்தியிலும் எமது மக்கள் உழைத்துவாழத் தயாராக உள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்தியுள்ளோம்.

துயரங்களையே எதிர்கொண்டு வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களின் நலன்கருதி அவர்கள்மீது நம்பிக்கைவைத்து பொருளாதார உதவிகள் வழங்கக்கூடிய அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து சகல வளங்களையும் உபயோகித்து முழுவீச்சில் செயற்பாட்டால் மட்டுமே போர்க்கால நெருக்கடிகளால் அல்லலுறும் மக்களின் வாழ்க்கை நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தி நெருக்கடிகளை வெற்றி கொள்ளலாம்.

பொருளாதார, தொழில்நுட்ப வல்லுனர்கள் சூழ்நிலைக்கும் நாட்டுக்குமேற்ற தொழில்களை இனங்காண்பதில் உதவிகள் வழங்க முன்வரவேண்டும். இவ்விடயத்தில் நாம் வெற்றி காண முடியுமாயின் எமது பணிகள் மேலும் இலகுவாக்கப்பட்டுவிடும்.

இந்நேரத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், இது போன்றதோர் பணியை முன்னெடுக்க உதவியாக இருந்த உள் நாட்டில் எமக்கு உதவி வழங்கிவருகின்ற ஸ்தாபனங்கள், பொதுமக்கள், உலகம் பரந்து வாழ்கின்ற எமது மக்கள், தமது பல இழப்புக்களுக்கு மத்தியிலும் எமது மக்களுக்காக உழைத்து வருகின்ற உலக நாடுகளில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக தொண்டர்கள் அனைவரதும் முழுமையான முயற்சியே எமது வெற்றியென்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive